Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.26/2023** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பால்செல்வம் |
| Father/Husband Name | : | பாலு |
| Village | : | முள்ளிமுனை |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | கடல் தொழில் |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2025.

(எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா தொண்டி காவல் நிலையத்திற்குட்பட்ட முள்ளிமுனை கிராமத்தில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். சாட்சி மலைரதி என் மருமகள். சாட்சி இதயகனி என் மனைவி. சாட்சி ரவீனா என் மகள். சாட்சி கணேசன் உள்ளூர்க்காரர். எதிரிகள் அனைவரையும் தெரியும். உள்ளூர்க்காரர்கள். இந்த வழக்கில் இறந்துபோன பால்கண்ணன் என் மகன். கடந்த 22.02.2021ம் தேதி என் மகனை காணவில்லை என தொண்டி காவல்நிலையத்தில் காலை 08.00 மணிக்கு சென்று புகார் கொடுத்தேன். 21.02.2021ம் தேதி இரவு 09.00

மணியளவில் இருந்து என் மகனை காணவில்லை என்பதால் மறுநாள் புகார் கொடுத்தேன். போலிசார் நான் கொடுத்த புகாரை பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்தார்கள், மேலும் என்னை தேடிப்பார்க்கச் சொன்னார்கள். நாங்கள் 3 நாட்களாக தேடிப்பார்த்தோம், என் மகன் கிடைக்கவில்லை என்பதால் 25.02.2021ம் தேதி மீண்டும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். 22.02.2021ம் தேதி நான் வாய்மொழியாகத்தான் புகார் கொடுத்தேன், எழுத்து மூலமாக கொடுக்கவில்லை. தேடிப்பார்க்க சொன்னதின் பேரில் தேடிப்பார்த்துவிட்டு காணவில்லை என்பதால் 25.02.2021ம் தேதி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். எனக்கு எழுத படிக்க தெரியும், கையெழுத்து போடுவேன். எனக்கு கண்பார்வை குறைவு என்பதால் நான் கைரேகை வைத்தேன். புகாரை போலிசார் எழுதினார்கள், நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு என்னிடம் கைரேகை பெற்றார்கள். அந்த புகார் **அ.சா.ஆ.1**. அதன் பிறகு 4 மாதங்கள் கழித்து தொண்டி காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்து தொண்டி திருவெற்றியூரை தாண்டி முனிஅய்யா கோவில் அருகே வரச்சொன்னதின்பேரில் நான், என் மனைவி இதயகனி, மருமகள் மலைரதி ஆகியோர்கள் அங்கு சென்றோம். அப்போது அங்கு தொண்டி காவல் ஆய்வாளர், திருவாடானை தாசில்தார், மருத்துவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் போலிசார் அங்கு இருந்தார்கள். நாங்கள் சென்றபோது எங்கள் ஊரை சேர்ந்த சின்ன முத்து மகன் கதிரவன்(1ம் எதிரி), ரெங்கு மகன் ஜெயபால் (2ம் எதிரி) இருந்தார்கள். காவல் ஆய்வாளர் என்னிடம் மேற்படி கதிரவனும், ஜெயபாலும் என் மகனை வெட்டி கொன்றுள்ளார்கள் என கூறினார். நாங்கள் சென்ற பிறகு தான் அந்த இடத்தில் தோண்டினார்கள். அப்போது என் மகன் அணிந்திருந்த உடையை பார்த்தேன். அந்த உடை என் மகன் அணிந்திருந்தது என அடையாளம் சொன்னேன். எலும்புக்கூடாக இருந்த உருவத்தில் என் மகன் அணிந்திருந்த உடைகள் இருந்தன. என் மகன் வெள்ளைக்கலர் கட்டம்போட்ட கைலி மற்றும் புளூ கலர் பூப்போட்ட சட்டை அணிந்திருந்தார். அதை நான் அடையாளம் காட்டினேன். உடலை அதே இடத்தில் அடக்கம் செய்தார்கள். பின்பு 2 நாட்கள் கழித்து தொண்டி காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்தார்கள். நான், என் மனைவி, என் மருமகள் ஆகிய மூவரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது எங்களிடம் இரண்டு மோதிரங்களை

காட்டி அந்த மோதிரங்கள் என் மகன் அணிந்திருந்ததா என்று கேட்டார்கள், அந்த மோதிரங்கள் என் மகன் அணிந்திருந்ததுதான் என்று அடையாளம் காட்டினேன். அப்போது காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் உள்ள பெண் (6ம் எதிரி சிவகாமி) அங்கு இருந்தார். நாங்கள் அடையாளம் காட்டிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன் பிறகு 3 நாட்கள் கழித்து தொண்டி காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்தார். அப்போது காவல் ஆய்வாளர் என்னிடம் ஒரு செயின் மற்றும் ஒரு பைக்கை காட்டினார். காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் 3 நபர்களை காட்டினார், அந்த 3 நபர்கள் 3ம் எதிரி பால்பாண்டி, 4ம் எதிரி சச்சின், 5ம் எதிரி லெட்சுமணன். ஏற்கனவே என்னிடம் செயினை காட்டியபோது அது என் மகனுடைய செயின் என்றும், அந்த செயினில் இருந்த டாலரை காணவில்லை என்றும் சொன்னேன். பின்பு 10 நாட்கள் கழித்து தொண்டி காவல் நிலையத்திலிருந்து போன் செய்தார்கள். நான் போனபோது எங்கள் ஊரை சேர்ந்த சின்ன முத்து மகன் மும்மது, சீனுசாமி மகன் அபிஷேக் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். அப்போது காவல் ஆய்வாளர் ஒரு டாலரை காட்டி இது என் மகன் அணிந்திருந்ததா என்று கேட்டார். ஆமாம் என் மகன் அணிந்திருந்த டாலரில் பால்கண்ணன் என்ற பெயர் இருக்கும், இதுதான் என்று அடையாளம் காட்டினேன். என் மகன் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்திருந்தான். எனக்கு தொண்டி காவல் ஆய்வாளர் எதிரிகள் 7 பேரும் சேர்ந்து என் மகனை கொன்றுவிட்டதாக சொன்னார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட இரட்டை மீன் பதித்த தங்க மோதிரம் ஒன்று, நங்கூரம் பதித்த தங்க மோதிரம் ஒன்று, பால்கண்ணன் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தங்க டாலர் ஒன்று, தங்க செயின் ஒன்று என் மகன் இறப்பதற்கு முன்பு அணிந்திருந்த நகைகள்தான். அந்த நகைகள் முறையே **அ.சா.பொ.1 முதல் 4**.

**முதன்மை விசாரணை சான்று பொருட்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.